# HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவன ஆளுகை அறிக்கையின் சுருக்கம்

கீழே தரப்பட்டுள்ள தகவல்களும் எடுத்துக்காட்டாக இணைக்கப்பட்டுள்ள தகவல்களும் HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.யின் (“HSBC”) 2013ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளின் (“ஆண்டறிக்கை”) 346 முதல் 365 வரையான பக்கங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவன ஆளுகை அறிக்கையின் சுருக்கமாகும்.

### பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் நீண்டகால வெற்றியை ஊக்குவிப்பதும் பங்குதாரர்களுக்கு நிலைபெறுதகு பெறுமதியை வழங்குவதும் HSBC ஹோல்டிங்ஸ் பணிப்பாளர்கள் சபையின் (“சபை”) நோக்கமாகும். குழுமத் தவிசாளரின் தலைமையிலான இச் சபை, குழுமத்தின் மூலோபாயங்கள் மற்றும் இடர்காப்புத் தேவைகளை நிர்ணயிப்பதுடன், அதனால் நிர்ணயிக்கப்பட்ட மூலோபாய இலக்குகளை அடைவதற்கு முகாமைத்துவத்தினால் சமர்ப்பிக்கப்படும் செயற்பாட்டுத் திட்டங்களையும் மூலதன ஒதுக்கீட்டையும் அங்கீகரிக்கின்றது. சபையினால் நிர்ணயிக்கப்படும் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு குழுமத்தின் பிரதம நிறைவேற்ற அதிகாரியைத் தலைவராகக் கொண்ட குழும முகாமைச் சபையிடம் (“GMB”) ஒப்படைக்கப்படுகின்றது.

### சபையின் அதிகாரங்கள்

உலகளாவிய ரீதியில் HSBCஇன் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்வது சபையின் பொறுப்பாகும். சபை இப் பணியை மேற்கொள்ளும்போது, ஏதேனும் பொருத்தமான சட்டங்கள், பிரமாணங்கள் நிறுவனத்தின் கூட்டிணைப்பு விதிகள் என்பவற்றிற்கு அமைவாக தனது அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியும். சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உசாவெல்லை விதிமுறைகளை www.hsbc.com/1/2/about/board-of-directors என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம். இவ் விதிமுறைகள் சபையினால் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### குழுமத்தின் முகாமைத்துவச் சபை (GMB)

குழும முகாமைத்துவச் சபைக்கு குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமை தாங்குகிறார். உலகளாவிய வியாபாரம் மற்றும் உலகளாவிய செயற்பாடுகள் ஒவ்வொன்றினதும் தலைவர்களும் பிராந்திய மட்டத்திலான பிரதம நிறைவேற்று அதிகாரிகளும், அங்கத்தவர்கள் என்ற முறையில் அல்லது அழைப்பின் பேரில் GMB கூட்டங்களில் பங்குபற்றுகிறார்கள். குழுமத்தின் இடர் முகாமைக்கான கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களை ஏற்படுத்துவதற்காகவும் பேணுவதற்காகவும் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்காகவும் குழுமத்தின் பிரதம இடர் அதிகாரியின் தலைமையில் இடர் முகாமைக் கூட்டங்களை GMB கிரமமான முறையில் நடத்துகின்றது. குழுமம் முழுவதிலும் தொடர்ச்சியாகக் கைக்கொள்ளப்பட வேண்டிய சிறந்த நடைமுறைகளைப் பிரதிபலிக்கும் உலகளாவிய தராதரங்களை உருவாக்கி அமுல் செய்வதற்காக GMBயின் உலகளாவிய தராதர வழிகாட்டுதல் கூட்டங்களும் கிரமமாக நடத்தப்படுகின்றன. இக் கூட்டங்களுக்கு குழுமத்தின் பிரதம இடர் அதிகாரியும் பிரதம சட்ட அதிகாரியும் கூட்டாகத் தலைமை தாங்குகின்றனர். ஒவ்வொரு கூட்டத்திலும் குழுமத்தின் நிதிக் குற்றவியல் பணிவொழுக்கத் தலைவர், குழுமத்தின் பணம் தூயதாக்கல் அறிக்கையிடும் அதிகாரி ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

### குழுத்தின் கணக்காய்வுக் குழு (GAC)

நிதி அறிக்கையிடல் தொடர்பான விடயங்களில் கண்காணிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் சபைக்கு ஆலோசனைகளைச் வழங்குதல் சம்பந்தப்பட்ட நிறைவேற்றுத் தரத்தில் அல்லாத பொறுப்புக்கள் குழுமத்தின் கணக்காய்வுக் குழுவைச் சாரும்.

### குழுமத்தின் இடர்காப்புக் குழு (GRC)

உயர் மட்டத்திலான இடர்கள் தொடர்பிலும் இடர் முகாமை விடயங்களிலும் சபைக்கு ஆலோசனை வழங்குதல், இடர் முகாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக (நிதி அறிக்கையிடல் தவிர்ந்த விடயங்களில்) நிறைவேற்றுத் தரத்தில் அல்லாத கண்காணிப்பை மேற்கொள்ளுதல் என்பன குழும இடர்காப்புக் குழுவின் பொறுப்புக்களாகும்.

### ஊதியம் தொடர்பான குழு

ஊதியம் வழங்குதல் தொடர்பான கொள்கையை அங்கீகரிப்பது இக் குழுவின் பொறுப்பாகும். இக் குழு தனது கடமைகளின் ஒரு பகுதியாக வருடாந்த ஊக்குவிப்புத் திட்டங்கள், பங்குரிமைத் திட்டங்கள், ஏனைய நீண்டகால ஊக்குவிப்புத் திட்டங்கள், பணிப்பாளர்கள் மற்றும் குழுமத்தின் ஏனைய சிரேஷ்ட ஊழியர்களுக்கான தனிப்பட்ட ஊதியத் திட்டங்கள் என்பவற்றின் நிபந்தனைகளைப் பரிசீலனை செய்கின்றது. குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தக்கூடிய விடயங்கள், எமது இடர்காப்பு அமைப்பில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்பனவும் இதில் அடங்கும். குழுவானது இப் பணியை மேற்கொள்ளும்போது, குழுமம் முழுவதற்கும் பொருத்தமான கொடுப்பனவுகள் மற்றும் நிபந்தனைகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்கிறது. எந்தவொரு பணிப்பாளரும் தனது சொந்த ஊதியத்தைத் தீர்மானிக்கும் விடயத்தில் சம்பந்தப்படுவதில்லை.

### நியமனக் குழு

நியமனக் குழுவவானது சபையின் கட்டமைப்பு, அளவு, அமைப்பு முறை என்பவற்றை (திறன்கள், அறிவு, ஆனுபவம், சுயாதீனம் மற்றும் பல்வகைத் தன்மையின் அடிப்படையில்) கிரமமாக மீளாய்வு செய்வதுடன், ஏதேனும் மாற்றங்கள் தொடர்பில் சபைக்கு சிபாரிசுகளை வழங்குகின்றது.

### நிறுவன நிலைபெறுதகு குழு

நிறுவன நிலைபெறுதகு குழுவானது, 2013ஆம் ஆண்டில் குழுமம் முழுவதற்குமான நிறுவன நிலைபெறுதகு கொள்கைகள் (இதில் சூழல், சமூகநலம், ஒழுங்கநெறி சார்ந்த விடங்களும் உள்ளடங்கும்) சம்பந்தமாக சபைக்கும் சபையின் குழுக்களுக்கும் நிறைவேற்று முகாமைத்துவதற்கும் ஆலோசனை வழங்குவதற்குப் பொறுப்பாக இருந்தது.

சபையினால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி, இந்தக் குழு 2013 டிசெம்பர் 31ஆம் திகதி கலைக்கப்பட்டது. இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புக்களில் அநேகமானவற்றை புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நடத்தை மற்றும் விழுமியங்கள் குழு நிறைவேற்றுகின்றது.

### நடத்தை மற்றும் விழுமியங்கள் குழு

2014 டிசெம்பர் சபையின் தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்தப்பட்ட நடத்தை மற்றும் விழுமியங்கள் குழு, HSBC தனது வியாபாரத்தை மேற்கொள்ளும்போது வாடிக்கையாளர்கள் நியாயமாகவும் வெளிப்படயாகவும் நடத்தப்படுவதையும் சரியான வாடிக்கையாளர்களுடன் நேர்மையான முறையில் வியாபாரம் மேற்கொள்ளப்படுவதையும் பொறுப்பு வாய்ந்த தொழில் வழங்குநராகச் செயற்படுவதையும் செயற்பாட்டுப் பிரதேசங்களின் சமூக நலனில் அக்கறை காட்டப்படுவதையும் உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தும். குழுமம் தனது வியாபார நடவடிக்கைகளில் HSBC விழுமியங்களைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக, HSBCயின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் தராதரங்கள் குறித்து சபைக்கு ஆலோசனை வழங்கும் நிறைவேற்றுத் தரத்திலல்லாத பொறுப்பை இக் குழு கொண்டுள்ளது. இக் குழு ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் நான்கு தடவைகள் கூடுகின்றது.

### உள்ளகக் கட்டுப்பாடுகள்

HSBC யின் இடர் முகாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புகளுக்கும் அவற்றின் செயற்றிறனை மீளாய்வு செய்வதற்கும் மூலோபாயக் குறிக்கோள்களை அடைவதற்கு எத்தகைய மற்றும் எந்த அளவுக்கு இடர்களை ஏற்க முடியும் என்பதைத் தீர்மானிப்பதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள். இத் தேவையை நிறைவேற்றுவதற்கும் FCA மற்றும் PRA வெளியிட்டுள்ள “விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள்” கைந்நூலுக்கேற்ப கடமைகளைப் புரிவதற்கும் நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சொத்துக்களின் அதிகாரமற்ற பாவனை அல்லது விற்பனையைத் தடுப்பதற்கும், சரியான கணக்குப் பதிவேடுகளைப் பேணுவதற்கும், வியாபார அமைப்பிற்குள் பயன்படுத்தப்படும் அல்லது பிரசுரிக்கப்படும் நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் பயன்நிறைவை உறுதிப்படுத்துவதற்கும் வழிகோலுவதே இந்த நடைமுறைகளின் நோக்கமாகும். விடயங்களின் பிழையான அறிக்கையிடல், தவறுகள், இழப்புக்கள் அல்லது மோசடிகளைத் தவிர்ப்பதற்கு நியாயமான அளவு (பூரணமான அல்ல) உத்தரவாதத்தை இந்த நடைமுறைகள் வழங்குகின்றன.

### நிதி அறிக்கையிடல்

2013ஆம் ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளின் தயாரிப்புக்காக குழும நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் அறிக்கையிடல் நடைமுறையில், ஆவணப்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடல் படிமங்களும் அவற்றிற்குப் பக்கபலமாக, அறிக்கையிடல் தேவைகள் பற்றிய விரிவான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் கொண்ட கணக்கு அட்டவணையும் பயன்படுத்தப்பட்டன. இந்த அட்டவணையானது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவுக்கும் முன்பதாக, குழுமத்திலுள்ள சகல அறிக்கையிடல் பிரிவுகளுக்கும் குழும நிதிப் பிரிவினால் விநியோகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடல் பிரிவினாலும் குழும நிதிப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படும் நிதித் தகவல்கள், சம்பந்தப்பட்ட நிதி அதிகாரியின் மூலமும் அறிக்கையிடல் பிரிவு மற்றும் குழும மட்டங்களில் மேற்கொள்ளப்படும் விரிவான மீளாய்வு நடைமுறைகளின் மூலமும் அத்தாட்சிப்படுத்தப்படுவது அவசியமாகும்.

### வெளிப்படுத்துகைக் குழு

ஏதேனும் தவறுகள், பிழையான அறிக்கையிடல்கள் அல்லது விடுபடுகைகள் தொடர்பில் HSBC ஹோல்டிங்ஸினால் பகிரங்கமாக வெளிப்படுத்தல் செய்யப்படும் விடயங்களை வெளிப்படுத்துகைக் குழு மீளாய்வு செய்கிறது. குழுமத்தின் கம்பனிச் செயலாளர் தலைமையிலான இக் குழுவில் உலகளாவிய நிதிப் பிரிவு, சட்டப் பிரிவு, இடர் முகாமைப் பிரிவு (நிதிக் குற்றவியல் அனுசரிப்பு, ஒழுங்குமுறை அனுசரிப்பு என்பனவும் உள்ளடங்கும்), தொடர்பாடல்கள் பிரிவு, முதலீட்டாளர் உறவுகள் பிரிவு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என்பவற்றின் தலைவர்களும் பிரதான பிராந்தியங்கள் மற்றும் உலகளாவிய வியாபாரத்தின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். வெளிப்படுத்தல்களின் நம்பகத்தன்மையானது உலகளாவிய நிதி மற்றும் இடர் முகாமைச் செயற்பாடுகளின் கட்டமைப்புக்கள் மற்றும் நடைமுறைகளினால் உறுதி செய்யப்படுகின்றன. நிதி அறிக்கையிடலின் நிபுணத்துவமான மற்றும் கண்டிப்பான பகுப்பாய்வு, உலகளாவிய வியாபாரம், உலகளாவிய செயற்பாடுகள் மற்றும் சில சட்டத்துறை நிறுவனத் தலைவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மீளாய்வுகள் என்பன இதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

HSBC

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்பரேஷன் லிமிட்டெட் – ஸ்ரீ லங்கா வெளியீடு. பிட்ச் தரப்படுத்தலில் AAA(lk) சான்றிதழைப் பெற்றுள்ளது.